# அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்சக்களுக்கு முடிவு கட்டப்படும்!

## அடித்துக் கூறுகின்றார் சம்பிக்க ரணவக்க



"இலங்கையில் முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் உள்ளது. அந்தத் தேர்தலில் ராஜபக்சக்கள் மக்களால் முழுமையாகத் துடைத்தெறியப்படுவார்கள்." - என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் மேலும் கூறியதாவது:-

"நாடு இன்னும் இருள்சூழ்ந்த பாதையில்தான் பயணித்துக்கொண்டிருக்கின்றது. எதிர்வரும் மார்ச் மாதம் என்பது தீர்க்கமானது. இதனால் முன்கூட்டியே ஆட்சியாளர்களால் தேர்தல் நடத்தப்படலாம். அது உள்ளூராட்சி சபை, மாகாண சபைத் தேர்தலாக இருக்காது.

நாடாளுமன்றத் தேர்தலாகவே அமையும். அந்தத் தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதும் தெரியாது. ஆனால், இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வருவதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய ராஜபக்சக்கள் நிச்சயம் துடைத்தெறியப்படுவார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு 9 வீத வாக்குகள் மட்டுமே உள்ளன. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மட்டுமே ஓர் ஆசனத்தைப் பெறக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

அதேவேளை, எமது பிராந்தியத்தில் மாலைதீவில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்துவிட்டது. நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். பங்களாதேஷில் அது நடந்து முடிந்துவிட்டது.

பாகிஸ்தானிலும் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதனால் இலங்கைக்குப் பாரிய தாக்கங்கள் எதுவும் ஏற்படவில்லை. இந்தியாவில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி வெற்றி பெறுவார். எனவே, இங்கு ஆட்சிக்கு வருவது யாராக இருந்தாலும் பொருளாதாரத்தில் பலமாக வளர்ந்து வரும் இந்தியாவுடன் கொடுக்கல் - வாங்கலில் ஈடுபட்டே ஆகவேண்டும்.

அடுத்தது அமெரிக்காவில் ஏற்படும் மாற்றம் எமக்குத் தாக்கம் செலுத்தாது. சட்ட ரீதியிலான தடங்கல் இல்லையெனில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெறுவார்." - என்றார். (அ)

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 08 செவ்வாய்க்கிழமை 20.02.2024 கதிர் 185




# இலங்கையில் என்றுமில்லாதவாறு களமிறங்கும் அரசியல் கூட்டணிகள்

## மும்முனைப் போட்டி பலமாக இருக்கும்



இலங்கையில் இதுவரை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின்போது இல்லாத அளவுக்கு இம்முறை அரசியல் கூட்டணிகள் களம் காணவுள்ளன. அதேபோல் இம்முறை மும்முனைப் போட்டி பலமாக இருக்கும் எனவும், 50 வீதத்துக்கு மேற்பட்ட 2➤



## யாழ். பல்கலை நுண்கலைப்பீட மாணவர்கள் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட மாணவர்கள் இன்று வகுப்புப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழ இராமநாதன் நுண்கலைப்பீட இசைத்துறையில் 4ஆம் வருடத்தில் கல்வி கற்க வேண்டிய தாம், 3ஆம் வருட 2ஆம் அரையாண்டில் கற்கிறோம். எனவே, தமது விரிவுரை செயற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டும் எனக் கோரியே மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான வழக்கு தீர்ப்பு சபாநாயகரால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

உயர் நீதிமன்றத்தின் முன் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான தீர்ப்பு சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்று பிரதி சபாநாயகரால் குறித்த தீர்ப்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

சட்டமூலம் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பில்,

3, 42, 53 மற்றும் 70 ஆகிய சரத்துகள் அரசியலமைப்பின் 12 (1) வது பிரிவுடன் ஒத்துப்போகின்றன. மேலும் அவை நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட வேண்டும். 2➤

## கிளிநொச்சியில் உறவுகள் பேரணி




வடக்கு - கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டத்தின் 7ஆம் ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு இன்று காலை கிளிநொச்சியில் அடையாளப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி பேரணி முற்பகல் 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பித்து முற்பகல் 11.30 மணிக்கு கிளிநொச்சி டிப்போ சந்தியில் நிறைவடைந்தது.

இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் 2➤



# தொப்புள் கொடி உறவுகளைப் பிரிக்காதே எம் வாழ்வைச் சிதைக்கத் துணை போகாதீர்!

## யாழில் இந்திய, இலங்கை அரசுகளுக்கு எதிராக மீனவர்கள் போராட்டம்

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி அடாவடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதுவராலயம் முன்பாக மீனவர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு மீனவர் 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# எதிர்பார்த்ததைவிட மின் கட்டணம் குறையுமாம்! அமைச்சர் காஞ்சன நாடாளுமன்றில் தெரிவிப்பு

மின்சாரக் கட்டணம் முன்னர் குறிப்பிட்ட தொகையை விட அதிகமாகவே குறைக்கப்படும் என எதிர்பார்க்கப் படுவதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் கா-ஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவை தொடர்பில் அவர்கள் முடிவெடுப்பார்கள், என்றும் அமைச்சர் கூறினார்.

மேலும் கடந்த டிசம்பரில் மின் கட்டணத்தை பெப்ரவரியில் திருத்தம் செய்ய வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்ததுடன் பொதுப் பயன்பாடுகள் ஆணையத்திடம் முன்மொழிவை அளித்திருந்தோம், எனவும் அவர் குறிப்பிட்டார். (04)

# நாட்டு மக்களுடைய தேவைகளுக்கும் அரசு முன்னுரிமை வழங்க வேண்டும்!

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கோரிக்கை

சர்வதேச சமூகத்தினது மட்டுமன்றி நாட்டின் பிரஜைகளின் தேவைகளுக்கு செவிசாய்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டுமென அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் கோரிக்கை விடுத்துள்ளார். இணையப் பாதுகாப்புச் சட்டம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்படி, தவறான செயல்முறை, உள்நோக்கம் மற்றும் பேச்சுச் சுதந்திரத்தில் ஏற்படக்கூடிய தாக்கம் ஆகிய மூன்று அம்சங்களில் கவனம் செலுத்தி, இணையப் பாதுகாப்புச் சட்டம் குறித்து அவர் தீவிர கவலைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வரையறைகள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான தாக்குதல்கள் போன்ற செயல்களை எதிர்த்துப் போராடும் நோக்கத்தில் உள்ளன. ஆனால், முறையான வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்தவும் அவை தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

மேலும் சட்டத்தைத் திருத்துவதற்கான செயல்முறை நடந்து கொண்டிருக்கும் வேளையில், சட்டத்தின் சாத்தியமான தாக்கமானது குறித்த தீர்வுகளைக் காணுமா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (04)

# கடந்த வருடம் ரெயில் விபத்தில் 194 பேர் உயிரிழந்ததாக தகவல்

கடந்த 2023 ஆம் வருடம் ரெயில் விபத்தில் 194 பேர் உயிரிழந்துள்ளதாக ரெயில்வே பாதுகாப்பு அதிகாரி அனுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, ரெயில் மிதி பலகையில் பயணித்த 88 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த வருடம் ரெயில் பாதையில் பயணிக்கும் போதும், பாதுகாப்பற்ற ரெயில் கடவைகளில் வாகனங்களை செலுத்தியதாலும் ஏற்பட்ட விபத்துகளினால் மேற்கண்ட நபர்கள் உயிரிழந்துள்ளனர் என தெரிவித்த அவர்,

ரயிலிலிருந்து இன்னோரன்ன வழிகளில் தவறி விழுந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரெப-44)

## தொப்புள் கொடி உறவுகளைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கங்கள் இணைந்து இந்தியத் தூதரகத்தை முற்றுகையிடப் போவதாக அறிவித்திருந்ததால் தூதுவராலயம் முன்பாக பெரிமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

முற்பகல் 11 மணியளவில் மீனவர்கள் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டப் பேரணியாகத் தூதுவராலயத்தை நோக்கி முற்றுகையிடச் சென்றபோது தூதுவராலயத்துக்கு அருகாமையில் போராட்டக்காரர்கள் பொலிஸாரால் இடைமறிக்கப்படனர்.

இதனைத் தொடர்ந்து மீனவர் சங்கப் பிரதிநிதிகள் 7 பேர் மட்டும் தூதுவராலயத்துக்குச் சென்று தூதுவரைச் சந்தித்து மகஜர் கொடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது போராட்டக்காரர்கள் இந்திய, இலங்கை அரசுகளுக்கு எதிராகப் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள், இந்திய இழுவைப் படகு உரிமையாளர்களே எங்களையும் வாழ விடு, கடற்றொழிலாளர்களைப் பிரித்தாளும் தந்திரத்தைச் செய்யாதே, தொப்புள் கொடி உறவுகளைப் பிரிக்காதே, இந்திய அரசே இலங்கையின் வடபகுதி மீனவர்களைத் திரும்பிப் பார், அத்துமீறும் இந்திய மீனவர்களின் அராஜகம் அடியோடு ஒழிய வேண்டும், சட்டவிரோத அத்துமீறலைத் தடுத்து நிறுத்து, வடக்கு மீனவர்களின் வளங்களைச் சூறையாடாதே உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வேளையில், போராட்டக்காரர்களைப் பொலிஸார் இடைமறித்தபோது அவர்கள், பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

மேற்படி போராட்டத்தில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும் வந்திருந்த மீனவர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

அதேநேரத்தில் பெருமளவிலான பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் போராட்டக் களத்தில் குவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## கிளிநொச்சியில் உறவுகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவுகள், சிவில் சமூக அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சர்வதேச நீதி கோரி கோஷம் எழுப்பினர். (அ)

## பயங்கரவாத எதிர்ப்புச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும், அந்த சரத்துகள் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பில் முன்மொழிந்துள்ளபடி திருத்தப்பட்டால், அந்த முரண்பாடுகள் நீங்கிவிடும்.

4வது சரத்து உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி, திருத்தம் செய்யப்பட வேண்டும்.

61 (1) சரத்து அரசியலமைப்பிற்கு உட்பட்டதுடன் விசேட பெரும்பான்மை மற்றும் வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட வேண்டும். அந்த சரத்து மீதான உயர் நீதிமன்றத் தீர்ப்பில் முன்மொழியப்பட்ட திருத்தங்களைச் செய்தால், அந்த முரண்பாடு நீங்கிவிடும். அதற்கேற்ப, உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி 72 (2) வது சரத்தும் திருத்தப்பட வேண்டும்.

83 (7) சரத்து விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அந்தப் பிரிவின் மீதான உயர் நீதிமன்றத் தீர்ப்பில் முன்மொழியப்பட்ட திருத்தங்களைச் செய்தால் அந்த முரண்பாடுகள் நீங்கிவிடும்.

மேலும், சட்டமூலத்தின் விதிகளின்படி சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்களுக்கு உட்பட்டு, எளிய பெரும்பான்மையால் மட்டுமே சட்டமூலத்தைச் சட்டமாக்க முடியும் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (04)

## இலங்கையில் என்றுமில்லாதவாறு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்குகளைப் பெறுவதற்கு பிரதான வேட்பாளர்கள் முழு வீச்சு டன் செயற்பட வேண்டிவரும் எனவும் அரசியல் ஆய்வா ளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2024 ஒக்டோபரில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்காக வரவு - செலவுத் திட்டத்தில் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த தேர்தலை இலக்கு வைத்து பரந்தப்பட்ட கூட்டணியை அமைப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

இதன்படி சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி, கூட்டணியில் உள்ள கட்சிகளையும், அமைப்புகளையும், தனிநபர்களையும் அதிகரிப்பதற்கான நகர்வுகளில் ஈடுபட்டுள்ளது.

மறுபுறத்தில் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் தமது கூட்டணியை விஸ்தரித்தே ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் பரந்தபட்ட கூட்டணியை அமைப்பதற்கான நகர்வுகளில் ஈடுபட்டு வருகின்றது.

நிமல் லான்சா, சுசில் பிரேமஜயந்த உட்பட மொட்டுக் கட்சியில் இருந்து விலகிய சில எம்.பிக்கள் இணைந்து புதிய கூட்டணி எனும் பெயரில் கூட்டணியொன்றை உருவாக்கியுள்ளனர். இக்கூட்டணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவுள்ளது.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியும் பரந்தபட்ட கூட்டணிக்கான அரசியல் ஆட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதற்கான பொறுப்பு முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சம்பிக்க ரணவக்க தலைமையிலும், மைத்திரிபால சிறிசேன தலைமையிலும், விமல் வீரவன்ச தலைமையிலும், ரொஷான் ரணசிங்க தலைமையிலும் ஏற்கனவே கூட்டணிகள் உதயமாகியுள்ளன.

இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள கூட்டணிகளில் பெரும்பாலான கூட்டணிகள் அரச தரப்பு மற்றும் பிரதான எதிர்க்கட்சி வேட்பாளரை ஆதரிக்கவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் இலங்கை அரசியல் வரலாற்றில் இதற்கு முன்னர் இவ்வாறு கூட்டணிகள் உருவாகவில்லை எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டாலும் இக்கூட்டணிகள் ஆசன ஒதுக்கீட்டுகளின் அடிப்படையில் அரசியல் முடிவுகளை எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கிழக்கு மாகாண ஆளுநரின் பங்குபற்றலோடு நடைபெற்றது



(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அக்குழுவின் இணைத் தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துகோரல, திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோரது இணைத் தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலக மட்டத்தில் மாவட்ட வர்த்தகர்கள் பயன்படுத்தும் தார்ப்பாய்களின் முறையான பதிவை முறைப்படுத்தவும், புல்மோட்டை விரிஏ-யினை மீண்டும் திறக்கவும் மற்றும் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் குடிநீர்ப் பிரச்சினை மற்றும் அவற்றின் தற்போதைய நிலை குறித்தும் குழு மீளாய்வு செய்தது.

மாவட்டத்தின் களப்புகள் மற்றும் கரையோரப் பிரதேசங்களில் கண்டல் தாவரங்களின் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்தல், மூதூர் சூரிய சக்திக்கு காணிகளை ஒதுக்குதல், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்காக மாணவர் பேருந்து சேவையை பயன்படுத்துதல் ஆகியவை முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளில் அடங்கும்.

கந்தளாய் மணல் சேகரிப்பாளர்கள் மற்றும் போக்குவரத்தாளர்களின் கூட்டுச் சங்கத்தினால் எழுப்பப்பட்ட சில பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படைகளின் உயரதிகாரிகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி புதிய மாணவிகளுக்கு வரவேற்பு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் இரண்டாயிரத்து இருபத்தி நான்காம் கல்வியாண்டுக்காக தரம் ஆறில் புதிதாக இணைந்து கொண்ட மாணவிகளை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வு தரம் ஆறு, ஏழு பகுதித்தலைவிகளின் வழிகாட்டலில் நேற்று (19) கல்லூரியின் முதல்வர் ஏ.பி.எப். நஸ்மியா சனூஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் கலந்து கொண்டார்.

தரம் ஆறு வகுப்பில் இணைந்து கொண்ட புதிய மாணவிகளை தரம் ஏழில் கல்வி கற்கும் மாணவிகள் வரவேற்றனர். தேசிய, பாடசாலைக் கீதங்கள் மற்றும் கல்லூரியின் ஒழுக்க விழுமியங்களை உள்ளடக்கிய பிரசுரமும் இனிப்புக்களும் அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட தரம் ஆறு, ஏழு மாணவிகளுக்கான காலை ஆராதனை நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர் ஆகியோரினால் நற்சிந்தனைகள் மற்றும் கல்வி தொடர்பான ஊக்கப்படுத்தும் உரைகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதி அதிபர்களான எஸ்.எஸ்.எம். மசூது லெவ்வை, ஏ.எச்.நதீரா, உதவி அதிபர் என்.டி.நதீகா உட்பட பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பழைய மாணவிகள் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பு பழுகாமம் வைத்தியசாலை வளாகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

(எம்.எம்.றம்ஸீன்)

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பழுகாமம் பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம் அண்மையில் நடைபெற்றது.

திருப்பழுகாமம் கிராமத்திலுள்ள ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளான மாவேற்குடா, விபுலானந்தபுரம், வன்னி நகர், வீரஞ்சேனை, பழுகாமம் 1, பழுகாமம் 2 பகுதி மக்களின் பங்களிப்புடன் போரதீவுப்பற்று பழுகாமம் பிரதேச வைத்திய அதிகாரியின் வேண்டுகோளிற்கு அமைவாக, பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன் அவர்களது பணிப்புரையின் கீழ் இந்த டெங்கு ஒழிப்பு சிரமதானப்பணி இடம்பெற்றது.

கிராம உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், விளையாட்டுக் கழக இளைஞர்கள் சிரமதானத்தில் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று திருவள்ளுவர் வித்தியாலயம் புலமை மாணவர் கௌரவிக்கும் நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அக்கரைப்பற்று திருவள்ளுவர் வித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் தங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் திருக்கோவில் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், எஸ்.சுரநுதன் பிரதம அதிதியாகவும், அக்கரைப்பற்று ஆதாரவைத்தியசாலை, வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன் விசேட அதிதியாகவும், திருமதி சு.நித்தியானந்தன், பாடசாலை அபிவிருத்தி சபை செயலாளர் சு.முரளிதர்ஷன், அக்கரைப்பற்று மக்கள் வங்கி முகாமையாளர் ராஜகாந்தன், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.





# ஐரோப்பிய ஒன்றிய விவசாயக் கொள்கைகளுக்கு எதிர்ப்பு! செக்குடியரசில் விவசாயிகள் வீதியிலிறங்கிப் போராட்டம்!




செக் குடியரசில் ஐரோப்பிய ஒன்றியத்தின் விவசாயக் கொள்கைகளுக்கு எதிராக அந்நாட்டு விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் 27 நாடுகள் ஒன்றிணைந்து கொண்டுவந்துள்ள பசுமைக் கொள்கைக்கு விவசாயிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பசுமைக் கொள்கை, இரசாயனப்பொருட்கள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்கிறது. இந்தப் புதிய கொள்கையின்படி விவசாயிகளுக்கு நிதிச்சுமை அதிகரிக் கக்கூடும் என்றும் இதனால் வேளாண்மைப் பொருட்களின் விலையேற்றத்தை சந்திக்க நேரிடும் என்றும் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

செக் குடியரசு அரசாங்கமானது, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒப்பந்தத்திற்கு உடன்பட்டுள்ள நிலையில், இதற்கு அந்நாட்டு விவசாயிகள் எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர். மேலும், அரசு கலைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் தற்போது வலுப்பெற்றுள்ளது.

இதனையடுத்து, செக் குடியரசில் நேற்று (பெப்.19) போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள், தலைநகர் ப்ராக் நகரின் சாலைகளில் ட்ரக்டர்களை அணிவகுத்து நிறுத்தியதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

போராட்டத்தின் ஒருபகுதியாக, அந்நாட்டின் விவசாயத்துறை அமைச்சர் மாரெக் வைபோர்னியிடம் கோரிக்கைக் கடிதத்தையும் போராட்டக்காரர்கள் வழங்கத் திட்டமிட்டிருந்தனர்.

இதனிடையே நேற்றைய போராட்டத்தில் பங்கேற்காத விவசாய அமைப்புகள், வரும் வியாழனன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளன. இந்தப் போராட்டத்தில், அண்டை நாடுகளைச் சேர்ந்த விவசாய அமைப்புகளும் கைகோர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (04)

# பப்புவா நியூகினியாவில் பழங்குடியின ஆயுதக்குழுக்கள் மோதலில் 26 பேர் சாவு!

## பொதுமக்களும் உயிரிழந்ததாக தகவல்



தெற்கு பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள பப்புவா நியூ கினியாவில் பழங்குடியின ஆயுதக் குழுக்களுக்கு இடையே நடைபெற்ற மோதலில் 26 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதுதவிர, கணிசமான அளவு அந்தக் குழுக்களோடு தொடர்புபடாத பொதுமக்களும் உயிரிழந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பொலிஸார் வெளியிட்டுள்ள தகவல்களில், எங்கா மாகாணத்தில் குறிப்பிட்ட பழங்குடியினத்தவர் மீது தாக்குதல் நடத்துவதற்காக எதிர்க் குழுவைச் சேர்ந்தவர்கள் ஆயுதங்களுடன் ஞாயிற்றுக்கிழமை சென்றுகொண்டிருந்தனர். அவர்களை வழியிலேயே அந்தப் பழங்குடியினர் சுற்றிவளைத்துத் தாக்கினர்.

இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில், மோதலில் ஈடுபட்ட 26 பேர் உயிரிழந்தனர். இந்தச் சண்டையின்போது கிராமத்தினர் பலரும்கூட குண்டுபாய்ந்து உயிரிழந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், பொதுமக்களில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்பது குறித்து உடனடித் தகவல் கிடைக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (04)

# மியான்மரில் 3 தளபதிகளுக்கு மரண தண்டனை விதிப்பு!




*மியான்மரில் பழங்குடியினப் படையினரிடம் சரணடைந்ததற்காக 3 படைப் பிரிவுத் தளபதிகளுக்கு அந்த நாட்டு ராணுவம் மரண தண்டனை விதித்துள்ளது.*

*இது குறித்து மியான்மர் ராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அதன்படி, சீன எல்லையையொட்டிய லாவ்காய் நகரை பழங்குடியினக் கூட்டுப் படையினரிடம் ஒப்படைத்துவிட்டு அந்தப் பகுதி ராணுவம் கடந்த மாதம் சரணடைந்தது. இது தொடர்பாக, லாவ்காய் நகர படைப் பிரிவு தளபதி உள்ளிட்ட 3 தளபதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.*

*லாவ்காய் நகரில் பல மாதங்களாகச் சண்டை தொடர்ந்து வந்த நிலையில், கடந்த ஜனவரி மாதம் பழங்குடியினக் கூட்டுப் படையிடம் நூற்றுக்கணக்கான ராணுவ வீரர்களுடன் படைப் பிரிவுத் தளபதிகள் சரணடைந்தனர். அவர்கள் அனைவரும் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.*

*லாவ்காய் நகரம் பழங்குடியினப் படையிடம் வீழ்ந்தமை மியான்மர் ராணுவத்துக்கு மிகப் பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது. (04)*

# அலெக்ஸி நவால்னி சிறையில் மரணம் ரஷ்ய அதிகாரிகளின் விசாரணை நீடிப்பு!



ரஷ்யாவில் அதிபர் விளாடிமிர் புடினைக் கடுமையாக எதிர்த்து வந்த முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான அலெக்ஸி நவால்னி சிறையில் மரணமடைந்தமை தொடர்பான விசாரணையை அந்த நாட்டு அதிகாரிகள் மேலும் நீடித்துள்ளனர்.

நவால்னியின் மரணம் குறித்த உண்மைகளை மறைப்பதற்காகவே விசாரணை நீடிக்கப்படுவதாக அவரது ஆதரவாளர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, புடினின் உத்தரவின்படியே சிறையில் தனது கணவர் நவால்னி கொல்லப்பட்டதாக அவரது மனைவி யூலியா நவால்னியா குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதிபர் புடினுக்கு எதிராக மிகப் பெரிய போராட்டங்களை நடத்தி வந்த நவால்னிக்கு, தீவிரவாதக் கருத்துகளைப் பரப்பிய குற்றச்சாட்டின் பேரில் 19 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த 2021 முதல் அவர் சிறையில் அடைக்க-ப்பட்டிருந்தார். ஏற்கெனவே நச்சுத் தாக்குதலுக்குள்ளாகி மரணத்தின் விளிம்பு வரை சென்று வந்த அவர், சிறையில் திடீரென கடந்த வெள்ளிக்கிழமை மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. (04)

# பாகிஸ்தானில் அமையவிருக்கும் புதிய அரசாங்கம் அதிகாரப் பகிர்வு தொடர்பாக கூட்டணிக்குள் இழுபறி

பாகிஸ்தானில் அமையவிருக்கும் புதிய அரசாங்கத்தில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வது தொடர்பாக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சிக்கும், பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கும் (பிபிபி) இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பிபிபி கட்சித் தலைவர் பிலாவல் புட்டோ ஜர்தாரி நேற்று தகவல் வெளியிட்டுள்ளார்.

புதிய அரசில் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்காக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை. மக்கள் தீர்ப்பு வழங்காமல் பிரதமர் பொறுப்பைப் பகிர்ந்துகொள்வதில் எனக்கு விருப்பமில்லை என்றார் அவர்.

கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் (பிடிஐ) கட்சியின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்கள்தான் மிக அதிக இடங்களைக் கைப்பற்றினர். இருந்தாலும், பெரும்பான்மை இல்லாததால் தாங்கள் ஆட்சியமைக்கப்போவதில்லை என்று இம்ரான் கான் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

# 1994-1999 இணைத்த திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவி நிலை உத்தியோகத்தர்களாக கருதி செயற்பட அறிவுறுத்து

(அஸ்ஹர் ஆதம்)

கொள்கைத் திட்ட அமுலாக்கல் மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் கீழ் 1994-1999 காலப் பகுதியில் இணைத்துக்கொள்ளப்பட்ட திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பதவி நிலை உத்தியோகத்தர்களாகக் கருதி செயற்படுமாறு பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சகல மாவட்டச் செயலாளர்களையும் அறிவுறுத்தியுள்ளது.

தாபன பணிப்பாளர் நாயத்தின் ஆலோசனைக்கமைய இவ்வறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பதவி நிலை தொடர்பில் அமைச்சுக்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் காணப்பட்டு வந்த சர்ச்சைகள் தொடர்பாக திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தேசிய சங்கம் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கும் தாபன பணிப்பாளர் நாயத்தின் கவனத்திற்கும் கொண்டுவந்ததையடுத்து இச்சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் எச்ஏ/05/01/25/11ஆம் இலக்க 2024.02.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இவ்வறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

1994-1999 காலப்பகுதியில் கொள்கை திட்ட அமுலாக்கல் மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் கீழ் நாடு தழுவிய ரீதியில் அமைச்சுக்கள் மாவட்ட திட்டமிடல் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலங்களுக்கு 532 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விசேட நியமனம் ஒன்றின் மூலம் நியமிக்கப்பட்டனர்.

இதில் ஒரு தொகுதியினர் 2010 ஆம் ஆண்டு மிகை ஆளணி அடிப்படையில் இலங்கை திட்டமிடல் சேவைக்குள் உள்வாங்கப்பட்டனர்.

அத்துடன் கொள்கை திட்ட அமுலாக்கல் மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் கீழ் 1994-1999. காலப்பகுதியில் அம்பாறை மாவட்டத்தில், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.பி.எம்.அஸ்ஹர் (பி.செயலகம் - சாய்ந்தமருது), ஜே. சுஹைப் (பி.செயலகம் - தமன), யூ.எல்.எம்.ஆஹிர் (பி.செயலகம் - அக்கரைப்பற்று), ஐ.எல்.எம்.பஜ்ருத்தீன் (மாவட்டச் செயலகம் - அம்பாறை) எம்.எம்.றியால் (பி. செயலகம் - சம்மாந்துறை ) லீனஸ் ரஞ்சன் (பி.செயலகம் - திருக்கோவில்), ரவிச்சந்திரன் (பி.செயலகம் - ஆலையடிவேம்பு ), எஸ்.சுதாகரன் (பி.செயலகம் - நிந்தவூர் ), குமுதினி (பி.செயலகம் - காரைதீவு), சுமனதாஸ மல்நெத்தி ஆகிய திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவி நிலை உத்தியோகத்தர்களாகக் கருதப்படுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் சாதாரண தர மாணவர்களுக்கான மாகாணமட்ட முன்னோடி பரீட்சை ஆரம்பம்



(காரைதீவு சகா)

கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் கபொத சாதாரண தரப் பரீட்சைக்கு எதிர்கொள்ளும் மாணவர்களுக்கான மாகாணமட்ட முன்னோடி கணிப்பீட்டுப் பரீட்சை நேற்று (19) திங்கட்கிழமை ஆரம்பமானது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 17 கல்வி வலயங்களிலும் இந்த முன்னோடி கணிப்பீடுப் பரீட்சை நேற்று (19) தொடக்கம் மார்ச் மாதம் ஐந்தாம் திகதி வரை நடைபெற இருக்கின்றது என கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்தார்.

இலங்கையில் கபொத சாதாரண தரத்தை பொறுத்தவரை நான்காவது இடத்தில் இருந்த கிழக்கு மாகாணம் ஆறாம் இடத்தை அடைந்தது. அதாவது தசம் நான்கு புள்ளிகளினால் இரண்டு நிலைகள் பின் தள்ள வேண்டி ஏற்பட்டது . இதற்கு பொருளாதார நெருக்கடி முதல் பல காரணங்களை கூறலாம்.

இருந்த பொழுதிலும் தற்போது அவை ஓரளவு தணிந்துள்ள நிலையில் எமது மாணவர்களை சிறந்த அடைவு மட்டத்தை எட்ட, மாகாண மட்டத்தில் முன்னோடிப் பரீட்சையை ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

இப்பரீட்சை உரிய கண்காணிப்போடு முறைப்படி நடத்தப்பட்டு, அந்தந்த வலயங்களில் குழு நிலை மதிப்பீடும் மேற்கொள்ளப்பட்டு மார்ச் மாதம் ஏழாம் திகதிக்கிடையில் நிறைவு செய்யப்பட்டு ஒன்பதாம் திகதிக்கு இடையில் மாகாணத்துக்கு சகல முடிவுகளும் வந்து சேர வேண்டும்.

இதனை அடிப்படையாக வைத்து எதிர்வரும் குறுகிய காலத்துக்குள் பரிகார வேலைத் திட்டம், மேலதிக வகுப்பு, விசேட வேலைத்திட்டம் ஆகியவற்றை மாணவர்களுக்காக மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது.

எனவே, இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுமாறு வேண்டுகிறேன், என்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரது அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர் அஸ்ஹருக்கு விசேட துஆப் பிரார்த்தனை



(அஸ்லம் எஸ்.மௌலானா)

திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற சிரேஷ்ட ஊடகவியலாளரும் கவிஞரும் இளைஞர் சேவைகள் மன்ற சிரேஷ்ட உத்தியோகத்தருமான ஏ.அஸ்ஹர் பூரண சுகம்பெற வேண்டி அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரம் ஏற்பாடு செய்திருந்த விசேட துஆப் பிரார்த்தனை ஞாயிற்றுக்கிழமை (18) மாலை சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவைக் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது. அமைப்பின் தலைவர் எம்.எஸ்.எம். ஹனிபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் எம்.ஐ.ஆதம்பாவா மௌலவி துஆப் பிரார்த்தனையை நடத்தி வைத்தார்.

இதில் ஊடகவியலாளர் ஏ.அஸ்ஹரின் குடும்பம் சார்பில் அவரது உறவினரான முன்னாள் பிரதேச செயலாளர் எம்.எம். தௌபீக் கலந்து கொண்டு குறித்த ஏற்பாட்டுக்காக நன்றி தெரிவித்து ஏற்புரை நிகழ்த்தினார். அமைப்பின் செயலாளர் ஏ.எல்.எம். சினாஸ் நன்றி யுரை நிகழ்த்தினார். சிரேஷ்ட உறுப்பினர் யூ.கே. காலித்தீன், நிகழ்வை ஒருங்கிணைப்பு செய்திருந்தார்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம் எழுதிய "தேசாந்தரம்" குறுநாவல் வெளியீடு திருமலையில்



(ஹஸ்பர் ஏ.எச்)

சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம் எழுதிய "தேசாந்தரம்" குறுநாவல் கதிர்.திருச்செல்வத்தின் தலைமையில் நம்மட முற்றத்தின் ஏற்பாட்டில் அண்மையில் (18) திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் வெளியீட்டு விழா இடம் பெற்றது.

நூலின் முதற் பிரதி கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலக திட்டமிடல் பணிப்பாளர் பாயிஸ்க்கு வழங்கி வெளியீட்டு வைக்கப்பட்டது.

நூலுக்கான திறனாய்வினை பொதுச்சுகாதார உத்தியோகத்தர் வ.முரளிதரன் சிறப்பாக வழங்கினார்.

ஏற்புரையை வழங்கிய நூலாசிரியர் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம், குறுநாவல் எழுந்த பின்னணி பற்றியும், வெகுவிரைவில் தனது நாவல் வெளிவரவுள்ளமை தொடர்பாகவும் குறிப்பிட்டார்.



# இரண்டாவது போட்டியிலும் இலங்கை வெற்றி ரி-20 தொடரையும் கைப்பற்றிக்கொண்டது!



ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான இரண்டாவது ரி-20 கிரிக்கெட் போட்டியில் 72 ஓட்டங்களால் வெற்றி பெற்ற இலங்கை அணி தொடரில் இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையில் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்து, இலங்கை அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

அதன்படி களமிறங்கிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சதீர சமரவிக்ரம 51 ஓட்டங்களையும் அஞ்சலோ மத்தியூஸ் 42, பத்தும் நிஸ்ஸங்க 25, குசல் மெண்டிஸ் 23 ஹசரங்க 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

ஆப்கானிஸ்தான் அணியின் உமர்சாய் மற்றும் மொஹமட் நபி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்களையும் பசல்ஹக் பரூக்கி மற்றும் நவீன் உல் ஹக் இருவரும் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடந்து 188 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கோடு களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, 17 ஓவர்களில் 115 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து தோல்வியடைந்தது. கரீம் ஜனத் 28 ஓட்டங்களையும் மொஹமட் நபி 27 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர்.

இலங்கை அணியின் அஞ்சலோ மத்தியூஸ், பினுர பெர்னாண்டோ, மதீஷ பத்திரன மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இப்போட்டியில் நஜிபுல்லா சட்ரனின் விக்கெட்டினை இலங்கை அணியின் தலைவர் வனிந்து ஹசரங்க வீழ்த்திய போது ரி-20 சர்வதேசப் போட்டிகளில் 100 விக்கெட்களை வீழ்த்திய வீரர்களின் பட்டியலில் இணைந்தார்.

ரி-20 சர்வதேசப் போட்டிகளில் விரைவாக 100 விக்கெட்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் முதலாவது இடத்தில் ஆப்கானிஸ்தான் அணியின் வீரர் ரஷீட் கான் உள்ளார். அவர் 52 போட்டிகளில் அந்த மைல் கல்லை எட்டியிருக்க, 63 போட்டியில் 100 விக்கெட்களை வீழ்த்தி வனிந்து ஹசரங்க அவருக்கு அடுத்த நிலையைப் பிடித்துள்ளார்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக அஞ்சலோ மத்தியூஸ் தெரிவானார்.

தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டி நாளை 21 ஆம் திகதி, தம்புள்ளை ரன்கிரி மைதானத்திலேயே இடம்பெறவுள்ளது. (04)

# நான்காவது டெஸ்ட் போட்டியில் ஜஸ்ப்ரித் பும்ராவுக்கு ஓய்வு!

இங்கிலாந்து அணிக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளர் ஜஸ்ப்ரித் பும்ராவுக்கு ஓய்வு வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட தொடரில் மூன்று டெஸ்ட்கள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்திய அணி 2-1 என தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

முதல் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 80.5 ஓவர்கள் பந்துவீசியுள்ள ஜஸ்ப்ரித் பும்ரா, 17 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். அதேநேரம் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவராகவும் உள்ளார்.

இந்தநிலையில் ராஞ்சியில் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நான்காவது டெஸ்ட் போட்டியில் பணிச்சுமை காரணமாக பும்ராவுக்கு ஓய்வு வழங்க இந்திய கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது. நான்காவது போட்டியின் முடிவின் அடிப்படையில் ஐந்தாவது போட்டியில் பும்ரா விளையாடுவாரா? இல்லையா? என்பது உறுதிசெய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, மூன்றாவது போட்டியில் அவருக்கு ஓய்வு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், பின்னர் அந்த முடிவில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டு அவர் அந்தப் போட்டியில் விளையாடியிருந்தார்.

இந்திய டெஸ்ட் அணியின் வீரர்கள் ராஞ்சியில் மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான பயிற்சிகளை ஆரம்பித்துள்ள நிலையில், ஜஸ்ப்ரித் பும்ரா அஹமதாபாத் சென்றுள்ளதாகவும் பயிற்சிக்காக அணியுடன் இணைந்து கொள்ளவில்லை என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. (04)








## மாணவர்களின் வலண்டைன் சொக்லேட்களைக் கைப்பற்றி ஏப்பமிட்ட ஆசிரியர்கள்!

மொனராகலை மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலையொன்றில் கடந்த வலண்டைன் தினத்தன்று (14) மாணவ, மாணவியரின் பைகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட சொக்லேட்களை குறித்த பாடசாலையின் ஆசிரியர்கள் உட்கொண்டதாக பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளதாக தென்னிலங்கை பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து அச்செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது – காதலர் தினத்தை முன்னிட்டு குறித்த தேசிய பாடசாலையில் தரம் 6 முதல் தரம் 13 வரை பயில்கின்ற மாணவர்களின் பைகளை பரிசோதிக்க பாடசாலையின் அதிபர் தீர்மானித்திருந்தார். அதன்படி, ஆசிரியர்கள், மாணவ தலைவர்கள் இணைந்து நடத்திய சோதனையின்போது, பல்வேறு விலைகள் அடங்கிய சொக்லேட்கள், ரோஜா மலர்கள் உள்ளிட்ட பரிசுப் பொருட்கள் பைகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

குறித்த மாணவர்களிடம் இது குறித்து ஆசிரியர்மார் கேட்டபோது, அவற்றில் சில வெளி நபர்களால் தமக்கு வழங்கப்பட்டவை எனவும், இன்னும் சில தாம் வெளி நபர்களுக்கு வழங்க வைத்திருந்தவை எனவும் மாணவ, மாணவியர் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து கைப்பற்றப்பட்ட சொக்லேட்கள் உட்பட அனைத்து பொருட்களும் ஆசிரியர் ஓய்வறைக்கு கொண்டு செல்லப்பட்டன. அங்கு சில ஆசிரியர்கள் சொக்லேட் பெட்டிகளை உடைத்து அவற்றை உட்கொண்டுள்ளனர். உட்கொண்ட சொக்லேட்களின் வெறும் பெட்டிகள், காகித உறைகள் ஆகியன பாடசாலையில் இடத்திற்கிடம் வீசப்பட்டுக் கிடந்ததை மாணவர்கள் கண்டுள்ளனர்.

காதலர் தினப் பரிசு பெற்ற மாணவ, மாணவியரின் பெற்றோர்களை மறுதினம் (15) பாடசாலைக்கு வரவழைத்த அதிபர் இது தொடர்பில் பெற்றோரை கடுமையாக எச்சரித்துள்ள அதே வேளை, மாணவர்களிடம் கைப்பற்றப்பட்ட சொக்லேட்களை உட்கொண்ட ஆசிரியர்களுக்கு பெற்றோர் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரெப-44)

## வறண்ட காலநிலையால் மின் தேவை அதிகரிப்பு!

நாட்டில் தற்போது நிலவும் வறண்ட காலநிலை காரணமாக நாளாந்த மின்சாரத்துக்கான தேவை 3 முதல் 4 ஜிகாவோட் வரை அதிகரித்துள்ளது.

இந்த நாட்களில் நீர் மின் உற்பத்தி 21 வீதமாகக் குறைந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார்.

தற்போது நீர் மின்னுற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு 83 சத வீதமாக உள்ளதாகவும் அவர் கூறினார்.

சூரியசக்தி மூலம் 4.5 வீத மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. காற்றாலை மூலம் 5 வீத மின்சாரம் உற்பத்தியாகின்றது. 64 வீத மின்சாரம் அனல் மின் உற்பத்தி மூலம் பெறப்படுகின்றது. இதனால் மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துமாறு இலங்கை மின்சார சபை மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.02.2024 இல் வெளியிடப்பெற்றது.